ENGLAND

www.tamilarangam.net

# ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தாய்த் தமிழகம் தொடர்ந்து ஆதரவு நல்கி வந்திருக்கிறது. சிங்கள வெறியர்களால் தமிழர்கள் அடைந்த துயரம் நெடும் வரலாறு ஆகும். 1958, 1963, 1967, 1969, 1972, 1975, 1978, 1933-லிருந்து 1989 வரை ஈழத் தமிழர்கள் கொடுமைகளுக்கு மேல் கொடுமைகளை அனுபவித்தனர். அயல்நாட்டுத் தமிழர்கள் தாய்த் தமிழகம் என்ன செய்யப் போகிறது? என்று விழியில் நீர் மல்க எதிர்நோக்கினர். ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு, ஈழத் தமிழர் நலன் காக்க இந்திய, இலங்கை அரசுகளுக்குத் தமிழகத் தமிழர்கள் கொடுத்த அழுத்தமும், நெருக்குதல்களும், ஈழ விடுதலைப் போராட்டத்தில் கலைஞரின் பங்கு ஆகிய முப்பெரும் நிலைகளில் இப் பிரச்சினையை ஆய்ந்தால் தமிழகத்தின் எழுச்சி சிறப்புற வெளிப்படும்.

பல்வேறு அரசியல் கட்சிகளினால் தமிழர்கள் சிதறிக் கிடந்தாலும், ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பதிலே கட்சி வேறுபாடு கடந்து ஒன்றுபட்டு குரல் எழுப்பினர். தமிழகத்தில் ஆளுங் கட்சியாகத் திகழ்ந்த அ.இ.அ.தி.மு.க.வும் எதிர்க்கட்சியாக விளங்கிய தி.மு.க.வும் இப் பிரச்சினையில் ஒன்றுபட்டு ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டனர். திராவிடர் கழகமும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரசும் ஈழப் பிரச்சினையில் தீவிரக் கவனம் செலுத்தி விடுதலைப் போராளிகளுக்காகத் தொடர்ந்து பாடுபட்டனர். தமிழகத்தில் உள்ள பிற கட்சிகளும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்துப் போராட்டங்களில் பங்கு பெற்றனர். மாணவர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், தொழிலாளிகள், பல்வேறு தமிழர் அமைப்புகள் ஆகியனவும் ஈழப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றினர். தமிழகத்தில் உள்ள அய்ந்து கோடி தமிழர்களும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்த நிலையில் தமிழகமே எழுச்சி வடிவாகத் திகழ்ந்தது.

தமிழகத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும், இன உணர்வுள்ள இயக்கங்களுக்கும், பொதுநல அமைப்புகளுக்கும் கடந்த அய்ந்து ஆண்டுக் காலமாக இலங்கைப் பிரச்சினையே பிரதானமாயிருந்தது. தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கை அரசைக் கண்டித்தும், ஈழத் தமிழர்களைக் காக்கக் கோரி இந்திய அரசை வலியுறுத்தியும் தொடர்ந்து போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும், மறியல்களும், பேரணிகளும், ஊர்வலங்களும், கண்டனக் கூட்டங்களும் நடைபெற்றுக் கொண்டேயிருந்தன. கடை அடைப்புகளும், பொது வேலை நிறுத்தங்களும், அறப் போராட்டங்களும் பலமுறை நடத்தப் பெற்று தமிழர்களின் உணர்வு வெளிப்படுத்தப் பட்டது.

18-6-'83 அன்று திராவிடர் கழகம் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் 'தமிழகச் சிறைகளில் உள்ள விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட வேண்டும்; அவர்கள் மீதுள்ள வழக்குகளைப் பின்வாங்க வேண்டும்; அவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்கக் கூடாது; இலங்கையிலிருந்து தமிழகம் வரும் விடுதலைப் புலிகள், தமிழர்கள் ஆகியோர்க்குத் தமிழக அரசும், தமிழக மக்களும் அடைக்கலம் அளிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக் காலகட்டத்தில் இப் பிரச்சினைக்காகத் துவங்கிய முதல் நிகழ்ச்சியும் முக்கிய நிகழ்ச்சியும் இதுவாகும். 83 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழகம் முழுவதும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எழுச்சிப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இலங்கையிலே தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து அனைத்துக் கட்சியின் சார்பாக கண்டன ஊர்வலம் நடத்தப்பட்டது. 27-7-83 அன்று நடைபெற்ற இவ்வூர்வலம் சென்னை நகரைக் குலுக்கியது- இலங்கை அரசை அதிரவைத்தது. தமிழினப்படுகொலையை தடுத்து நிறுத்திட இந்திய அரசும், அய். நா. மன்றமும் உடனே தலையிட வேண்டும் என்று திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஈழத் தமிழர்களின் துயரத்திற்கு அனுதாபம் தெரிவித்து 28-7-83 முதல் ஆறு நாள்கள் தமிழகத்தில் துக்கம் அனுசரிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. அரசு விழாக்கள் ரத்து செய்யப்பட்டன. வாகனங்கள் கறுப்புக் கொடிகளுடன் ஊர்ந்தன. அரசு ஊழியர்கள் உட்படப் பொதுமக்கள் அனைவரும் கறுப்புச் சின்னம் அணிந்தனர். இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் தமிழக அரசே 2-8-83 அன்று பொது வேலைநிறுத்தத்தை அறிவித்தது. அன்று தமிழகமே அமைதியில் புதையுண்டது. தமிழகத்தின் ஒற்றுமையைக் கண்டு பிற மாநிலங்கள் வியப்படைந்தன. இலங்கை அரசு அதிர்ச்சி அடைந்தது. ஈழத் தமிழ் மக்களுக்கு இச் செயல் தமிழகத்தின் மீது மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. இனப்படுகொலையைக் கண்டித்து டில்லியில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்தின் முன் தி.மு.க., அ.தி.மு.க. இ. காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி இலங்கை அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தமிழர்களின் துக்கத்தையும் கண்டனத்தையும் தெரிவிக்கும் வகையில், திராவிடர் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க, இந்திய 'சுதந்திர' நாளாகிய ஆகஸ்ட் 15 அன்று, கட்சி வேறுபாடு கடந்து, தமிழகத்தின் வீதிகள் தோறும்-வீடுகள் தோறும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. ஈழ விடுதலையை அங்கீகரிக்கும் தீர்மானத்தை நாடாளுமன்றத்திலே நிறைவேற்ற வேண்டும் என்று இந்திய அரசை திராவிடர் கழகம் வலியுறுத்தியது.

ஈழத் தமிழர்களைக் காக்க இந்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் தலைமையில் 'அனைத்துக் கட்சிக் குழு' ஒன்று டில்லி சென்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் வலியுறுத்தியது.

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் இன்னல் கண்டு தமிழகமே துடித்தது. சிங்கள வெறியர்களிடமிருந்து ஈழத் தமிழர்களைக் காக்க ('Stop Genocide') இந்திய அரசே! ராணுவத்தை அனுப்பு! என்ற கோரிக்கை மனிதாபிமானம் உள்ள அனைவராலும் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டது. இந்திய அரசின் மெத்தனப்போக்கு தமிழர்களிடத்தே வெறுப்பை விளைவித்தது. இந் நிலையில் 7-8-83 அன்று தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. நெடுமாறன் அவர்கள் இலங்கை நோக்கி தியாகப்பயணத்தை மேற்கொண்டார். மதுரையிலிருந்து ராமேஸ்வரம் நோக்கி புறப்பட்ட 'தியாகப் பயணத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திற்கு' தமிழக மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இலங்கை அரசு, தியாகப்படையைத் தடுத்து நிறுத்தச் சொல்லி இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் அளவிற்கு தமிழகத்தில் எழுச்சி ஏற்பட்டது.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் மட்டுமன்றி ஆதீனங்களும் குரல் கொடுத்தன. ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு 'நெஞ்சின் குருதி கொதிக்கிறது!' என்று உணர்ச்சி வயப்பட்டு மொழிந்தார் குன்றக்குடி அடிகளார் அவர்கள். இலங்கைத் தமிழர்க்காகத் துப்பாக்கி ஏந்துவோம்! என்றார் மதுரை ஆதீனகர்த்தர் அவர்கள்.

காமன்வெல்த் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள ஜெயவர்த்தனே டில்லி வந்தபொழுது, தமிழர்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் திராவிடர் கழகமும், தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜெயவர்த்தனேவுக்கு கறுப்புக்கொடி காட்டினர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு எனும் நிலையில் மிக முக்கியமாகக் குறிப்பிடவேண்டியது 17-12-83, 18-12-83 ஆகிய இரண்டு நாள்கள் மதுரையில் திராவிடர் கழகம் நடத்திய 'ஈழவிடுதலை மாநாடாகும்.' திராவிடர்கழக மாநில மாநாடு 17ஆம் தேதி நடைபெற்றது. 18ஆம் தேதி நடைபெற்ற மாநாட்டிற்குப் பெயரே தமிழ்ஈழ விடுதலை மாநாடு என்பதாகும். ஈழத் தமிழர்களுக்கு தமிழ் நாட்டுத் தமிழர்களின் ஆதரவினையும், எழுச்சியினையும் வெளிப்படுத்துவதாக அம்மாநாடு அமைந்தது. ஈழவிடுதலை மாநாட்டிற்கு திராவிடர் கழகத் தோழர்கள் வந்து சேர்ந்த விதமே தனிச் சிறப்பிற் குரியது. கழகத் தோழர்கள் ஏழு குழுவாகப் பிரிந்து கோவை, வேலூர், கன்னியாகுமரி, இராமேசுவரம், தருமபுரி, திருவாரூர், சென்னை ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டு ஈழத் தமிழர் பிரச்சினைகள் பற்றி தமிழ் நாட்டு மக்களிடையே பிரசாரம் செய்து கொண்டு, நடைப்பயணமாக பல நூறு மைல்கள் கடந்து மாநாட்டுத் திடலை அடைந்தனர். ஈழ விடுதலை மாநாட்டை ஒட்டி நடைபெற்ற பேரணி உணர்ச்சிப் பிழம்பாய் தமிழர்கள் இருப்பதை எடுத்துக் காட்டியது.

ஈழ விடுதலை மாநாட்டின் தன்னிகரற்ற சிறப்பிற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்தமான விருப்பம் செயல்படுத்தப்பட்டது மதுரை மாநாட்டில்தான். ஈழ விடுதலைக் கொடியை பிரகு களப்பலியான விடுதலைப்புலி குமரி நாடன் ஏற்றிய நிகழ்ச்சி லட்சோப லட்சம் மக்களை உணர்ச்சி கொள்ளச் செய்தது.

ஈழ விடுதலை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கைத் தமிழர்களுக்கு புது நம்பிக்கையை அளித்தது. அத் தீர்மானமாவது :

**தமிழ் ஈழ விடுதலை மாநாட்டுத் தீர்மானம்**
**ஈழ விடுதலை கட்டாயத் தேவை**

18-12-'83 ஞாயிறு அன்று திராவிடர் கழகத்தின் சார்பில், மலேசியா திராவிடர் கழகத் தலைவர் திருச்சுடர் கே. ஆர். இராமசாமி அவர்கள் தலைமையில் மதுரையில் நடைபெற்ற ஈழ விடுதலை மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

- மொழியாலும் பண்பாலும் ஒன்றுபட்டாலும் கடற்காலினால் பிரிக்கப்பட்டதால் வரலாற்று நேர்ச்சியில் (historical process) இரு தேசிய இனங்களாக மலர்ந்து நிற்கும் நம் தொன்மைத் தமிழினத்தின் இலங்கைவாழ் உடன்பிறப்புக்கள், அந்நாடு ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து 1948இல் விடுபட்ட நாளிலிருந்து படிப்படியாகக் குடியுரிமை, வாக்குரிமை, மொழி—பண்பாட்டுச் சமனியம், நியாயமான தொழில்—வேலை வாய்ப்பு முதலியவற்றை இழந்து, அரசு ஆதரவு பெற்ற சிங்களர் குடியேற்றத்தால் வடக்கு, கிழக்கு மாவட்டங்களான மரபுவழித் தாயகத்தின் சில பகுதிகளைப் பறிகொடுத்து, உடலுக்கும் உயிருக்கும் சொத்துக்கும் காப்பின்றி வாழும் அவலநிலை ஏற்படும்படியாகக் காட்டுத்தனமான தாக்குதலுக்கும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு சித்திரவதை முதலிய கொடுமைகளுக்கும் அவ்வப்பொழுது ஆட்பட்டு, எதிர்கால வாழ்வுறுதியற்ற ஏதிலிகளாய் 1958, 1977, 1981 ஆண்டுகளைப் போல் விரட்டப்படும் துயர நடப்புகள் மேலும் தொடராமல் இருக்க வேண்டுமெனில், தமிழ் ஈழத் தாயக விடுதலை ஒரு கட்டாயத் தேவை என்பதை 1983 ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் சிங்கள வெறியர் நடத்திய இனக்கொலை முயற்சி தெள்ளத் தெளிவாக்கிவிட்ட காரணத்தால், தமிழ் ஈழத் தாயகம் காணும் குறிக்கோளை அடைவதற்குப் பல்வேறு வழிகளில் போராட்டம் நடத்துவோருக்குத் தமிழக மக்கள் எல்லா ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்றும், இந்த மாநில மக்களின் உணர்வுகளை மதித்தும், மனித உரிமைக்காப்பு என்ற கண்ணோட்டத்திலும் இந்த நியாயமான காரியம் (just cause) எளிதாக முடிவதற்கு மைய அரசு துணை நிற்கவேண்டுமென்றும், இறுதி வெற்றி கிட்டும் வரை ஈழ விடுதலைப் போராளிகளுக்கு இந்தியாவில் அரசியல் அடைக்கலம் அளிக்கவேண்டும் என்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது.

ஈழ விடுதலை மாநாட்டிற்கு உலகின் பல பகுதிகளிலிருந்து தமிழர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஈழ விடுதலைக்காக குரல் கொடுத்தனர். அம் மாநாடு உலகத் தமிழர் மாநாடாகத் திகழ்ந்தது.

சிங்கள வெறியர்களால் ஈழத் தமிழர்கள் உயிரும், உடைமையும், உரிமையும் இழந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் தமிழகச் சட்டப்பேரவையில் 24-10-83 அன்று சட்டப் பேரவைத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. ஈழத் தமிழர்களுக்காக 2 நிமிட மவுனம் அனுசரிக்கப்பட்டுப் பின் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று இரங்கல் தெரிவித்த உருக்கமான காட்சி தமிழர்களின் உள்ளத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இந் நிகழ்ச்சியின்போது சட்டப்பேரவைத் தலைவரும் அமைச்சர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கறுப்பு உடை அணிந்து வந்திருந்தனர்.

சட்டப்பேரவையில் ஈழ விடுதலையை ஆதரித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வலியுறுத்தி சட்டமன்றத்தின் முன்பு திராவிடர் கழகத்தினர் 26-4-84இல் ஆர்ப்பாட்டம் நடத்திக் கைதாயினர்.

ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு காட்டிவரும் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் கண்டித்து 15-8-84 சுதந்திர நாளை திராவிடர் கழகம் துக்கநாளாகக் கொண்டாடி எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

ஈழத் தமிழர்களைக் காக்க இந்திய அரசு ராணுவத்தை அனுப்பிட வேண்டும் என்று பலரும் குரல் கொடுத்து வந்தனர். அப்போது ராணுவ அமைச்சராக இருந்த ஆர். வெங்கட்ராமன் இலங்கைக்கு 'ராணுவத்தை அனுப்பச் சொல்வது முட்டாள் தனம்' என்று கூறி தமிழர்களுக்கு துரோகம் இழைத்தார். அதனைக் கண்டிக்கும் வகையில் ஆர். வெங்கட்ராமன் குடியரசுத் துணைத் தலைவர் பதவியேற்று முதல் முறை தமிழகம் வந்தபோது திராவிடர் கழகம் கறுப்புக் கொடி காட்டி தமிழர்களின் இதய வேதனையைத் தெரிவித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தமிழகத்தின் பங்கு என்று சொல்லுகின்ற வேளையில் முதலில் சிந்தைக்கு வருவது 'டெசோ' (Tesso) அமைப்பு ஆகும். 'இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்வதற்கு தமிழ் ஈழத் தனி நாடு அமைப்பது தவிர வேறு தகுந்த வழியில்லை' என்ற உண்மையை இந்தியாவின் பிற மாநிலங்களுக்கும், உலக நாடுகளுக்கும் உணர்த்தவும், தக்க ஆதரவு திரட்டவும், தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு உதவவும் 'டெசோ' அமைக்கப்பட்டது. கலைஞரைத் தலைவராகவும், பேராசிரியர் அன்பழகன், வீரமணி, மாவீரன் நெடுமாறன் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட தமிழீழ ஆதரவுக்குழு-தமிழர்களின் குரலை ஓங்கி ஒலித்தது. தமிழீழத் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டதை எதிர்த்து டெசோ (Tesso-Tamil Ealem Supporters Organisation) நடத்திய பேரணியும் (25-[illegible]-85) ரயில் நிறுத்தப் போராட்டமும் (30-8-85) இந்திய இலங்கை அரசுகளை அதிர்ச்சி அடையச் செய்தன. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தின் முக்கிய நகரங்களில் பேரணிகள் நடத்தப்பட்டன. அய்ந்து லட்சம் முதல் பத்து லட்சம் பேர்கள் வரை கலந்துகொண்ட அப் பேரணிகளின் முடிவில்,

"தமிழ் ஈழ விடுதலை வீரர்களுக்கு
ஆதரவாக இருப்போம்;
தமிழ் ஈழ ஆதரவாளர்களுக்கு
புகலிடம் அளிப்போம்;
இலங்கையில் தமிழர் இனப்படுகொலையைத்
தடுத்து நிறுத்த எந்தத் தியாகத்துக்கும்
தயாராக இருப்போம்.
பெரியார், அண்ணா மீது ஆணையிட்டு
இந்தச் சூளுரையை மேற்கொள்கிறோம்"

என்று கலைஞர் சொல்லக் கூடியிருந்த லட்சோப லட்ச மக்களும் திருப்பிச் சொல்லிச் சூளுரை ஏற்றனர். டெசோ அமைப்பு செயல்பட்ட காலத்தில் தமிழகம் எரிமலையாக, உணர்ச்சிப் பிழம்பாக திகழ்ந்தது. இன உணர்வுள்ள இயக்கங்களும், அமைப்புகளும், மன்றங்களும், பேரவைகளும் 'டெசோ' அமைப்பில் பங்கு கொண்டு பணியாற்றின. தொடர்ந்து தமிழகம் போராட்டக் களமாகவே காட்சி அளித்தது. 'இலங்கையில் தமிழர்களை கொடுமைப்படுத்துவது தொடருமேயானால் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இருக்காது' என்று தமிழக முதல்வரே (எம். ஜி. ஆர்.) சட்டமன்றத்தில், டெல்லிக்கு கூறவேண்டிய அவசியத்தை, தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சி உருவாக்கியது.

ஈழப் பிரச்சினையில் தமிழகம் உணர்ச்சி மயமாகத் திகழ்ந்த நேரத்தில் ஒரு வருந்தத்தக்க சம்பவம் நடந்தது. தமிழர்களுக்கு உணர்ச்சி ஊட்டி, எழுச்சி உண்டாக்கிய டெசோ அமைப்பு ஒருங்கிணைந்து செயல்படமுடியாத சூழல் ஏற்பட்டது. ஆனாலும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவுக் குரல் எழுப்பத் தவறவில்லை. தி. மு. கழகம் ஒருபுறம் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராடிக் கொண்டிருந்தது. மறுபுறம் திராவிடர்கழகமும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வந்தன. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடவடிக்கை எடுக்கக் கோரி மத்திய அரசை தமிழக அரசியல் கட்சிகள் தத்தம் வழிகளில் ஆர்ப்பாட்டங்களைநடத்தி நெருக்கினர். தி.மு. கழகம் ஓர் அணியாகவும், திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் மற்றோர் அணியாகவும், அ.இ.அ.தி.மு.க. பிறிதோர் அணியாகவும் நின்று 'தமிழின நலம்' என்ற ஒரே கொள்கையை 'திரிசூலம்' போன்ற நிலையில் மும்முனைத் தாக்குதல்களை மத்திய அரசின் மீது நடத்திப் பணிய வைத்தனர்.

ஈழத் தமிழர்கள் மீது இந்திய அரசு துரோக ஒப்பந்தத்தைத் திணித்தது. இதனைத் தமிழகமே எதிர்த்து நின்றது. ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை திராவிடர் கழகமும், தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியும் எரித்து, சாம்பலை பிரதமருக்கு அனுப்பி, தமது எதிர்ப்பைத் தெரிவித்தன. தமிழக அரசியல் கட்சிகள் யாவும் 'தமிழர்கள்மீது ஒப்பந்தத்தைத் திணிக்காதே' என்று குரல் எழுப்பின.

இந்திய ராணுவம் இலங்கை அரசின் ஏவுகணையாக மாறி, தமிழர்களின் பக்கமே துப்பாக்கியைத் திருப்பியது. விடுதலைப் புலிகளும், அப்பாவிப் பொதுமக்களும் இந்திய ராணுவத்தின் குண்டுகளுக்கு இரையாகினர். விடுதலைப் புலிகளின் வசமிருந்த யாழ்ப்பாணப் பகுதியை இந்திய ராணுவம் நெருங்குகிறது-கைப்பற்றுகிறது என்று அறிவிப்பு வந்த போதெல்லாம் இந்தியநாட்டு மக்கள் சொல்லொணாத் துயரத்தில் மூழ்கினர். தமிழகம் ரத்தக் கண்ணீர் வடித்தது. இந்திய ராணுவத்தின் கொடுஞ் செயல்களைக் கண்டித்துத் தமிழகத்தில் கடை அடைப்புகள் நடத்தப்பட்டன. தமிழக ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க.வும் கடை அடைப்பில் பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

தம்பி பிரபாகரன் உயிரைக் குறி வைத்து இந்திய ராணுவம் தேடுதல் வேட்டையை நடத்தியபோது தமிழகத்திலிருந்து, 'பிரபாகரனைக் காப்பாற்று,' 'இந்திய அரசே! பிரபாகரனைக் கொல்லாதே!' என்று ஒட்டு மொத்தத் தமிழர்களும் குரல் எழுப்பினர். பிரபாகரனைக் காக்க சென்னையிலிருந்து குமரிவரை எழுச்சிப்பயணத்தை ஈழத் தமிழர் பாதுகாப்புக் கூட்டமைப்பு நடத்தி, தமிழர்களின் உணர்ச்சியை மத்திய அரசுக்கு உணர்த்தியது.

பிரபாகரனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் தமிழகத்தில் என்ன விளைவுகள் தோன்றும் என்பதனை மத்திய அரசு தெளிவாக உணர்ந்து பின்வாங்கியது.

ஈழத்திலே இந்தியப்படை நடத்தும் போரை தமிழர்கள் வெறுத்தனர். ஈழத்தில் போர் நிறுத்தம் கோரி தமிழர் பாதுகாப்பு இயக்கம் மனிதச் சங்கிலி அறப்போராட்டத்தை நடத்தியது. எல்லா தமிழர்களும் 'மனிதச் சங்கிலி'யில் கலந்துகொண்டு தமிழர்களின் உணர்வை மத்திய அரசுக்கு வெளிப்படுத்தினர். தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் போர் நிறுத்தம் கோரி பிரதமர் ராஜீவுக்குத் தந்தி அனுப்பினார்.

ஈழத் தமிழர்களுக்கு இன்னல் விளைவிக்கும் இந்திய ராணுவத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என்று இந்திய அரசை, தமிழர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கு உணவை அனுப்பாமல் முற்றுகையிட்டுக் கொன்ற சிங்கள அரசுக்கு, இந்தியா உணவு ஏற்றுமதி செய்வதை தமிழர்கள் வெறுத்தனர். உணவு ஏற்றுமதியை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று மத்திய அரசுக்கு தமிழர்கள் குரல் கொடுத்தனர். திராவிடர் கழகமும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து உணவுப் பொருளை இலங்கைக்கு அனுப்பும் தூத்துக்குடி துறைமுகத்தில் கப்பல் மறியல் செய்தன. இம் மறியல் கிளர்ச்சிக்கு தமிழர்களின் பெரும் ஆதரவு இருந்தது. தூத்துக்குடி துறைமுகத்தில் மக்களைக் கட்டுப்படுத்த, காவல்துறை குவிக்கப்பட்டிருந்தது.

இந்தியக் குடியரசு நாள் சிறப்பு விருந்தினராக ஜெயவர்த்தனேயை இந்திய அரசு அழைப்பு விடுத்தது. தமிழர்களின் எரியும் நெஞ்சத்தில் எண்ணெய் ஊற்றியது போல் ஆனது! அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடெங்கும் ஜெயவர்த்தனே கொடும்பாவிகள் கொளுத்தப்பட்டன.

www.tamilarangam.net



வீடுகள் தோறும் கருப்புக் கொடிகளை ஏற்றித் தமிழர்கள் தமது உணர்வை வெளிப்படுத்தினர்.

தமிழ் ஈழத்தில் இந்திய அமைதிப்படை நடத்தும் அட்டூழியங்களைக் கண்டித்து சென்னையில் உள்ள தென் மண்டல ராணுவத் தலைமையகம் முன் திராவிடர் கழகமும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தி எதிர்ப்பைத் தெரிவித்தன. இலங்கையிலிருந்து இந்தியப்படை வெளியேறவேண்டும் என்ற கோரிக்கை தமிழகம் முழுவதும் எதிரொலித்தது.

தமிழகத்தில் தங்கி சிகிச்சை பெறும் விடுதலைப் புலிகளை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இந்திய அரசு கைது செய்தது. விடுதலைப் புலிகளை கைது செய்தமையைக் கண்டித்து 2-9-'88 அன்று மதுரையில் மாபெரும் கண்டன மாநாடு நடத்தப்பட்டு, தமிழர்களின் எழுச்சி மத்திய அரசுக்கு உணர்த்தப்பட்டது. 26-9-'88 முதல் ஒரு வார காலத்திற்குக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் தமிழகம் முழுவதும் நடைபெற்றன.

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு—கிழக்கு மாநிலத்தில் மோசடியான தேர்தல் ஒன்றை இந்திய அரசு ராணுவத் துணையுடன் நடத்தி மக்கள் செல்வாக்கு இல்லாத ஒரு பொம்மை அரசை ஏற்படுத்திய செயல் தமிழர்களுக்கு வெறுப்பை விளைவித்தது. ஈ. பி. ஆர். எல். எப். என்னும் அமைப்பினை இந்திய அரசு கைப்பாவையாகப் பயன்படுத்திக் கொண்டது. துரோகத்தின் பரிசாக அதன் தலைவர் வரதராஜப் பெருமாளுக்கு முதல்வர் பதவி அளிக்கப்பட்டது. இலங்கைத் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பது பலமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் தேர்தலைப் புறக்கணிக்க விடுத்த வேண்டுகோளை ஏற்று 80 சதவீத மக்கள் வாக்களிக்கவில்லை. இந்திய அரசு தனது ராணுவ உதவியுடன் பல ஏமாற்றுப் பணிகளையும் தந்திரங்களையும் செய்து ஈழத் தமிழர்களின் விருப்பத்திற்கு மாறாக தனக்கென ஒரு கைப் பாவையான வீடண அரசை நிறுவியது. விடுதலைப்புலிகளும், இலங்கை அரசும் இந்தியப்படையே வெளியேறு என்று குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டனர். இந்தியப் படையை நம்பியே பதவியேற்ற மக்களின் ஆதரவற்ற பொம்மை அரசு இந்தியப் படையுடன் சேர்ந்து வெளியேறுவது காலத்தின் கட்டாயம்; ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினைக்காக்க முக்கிய தேவையாகும்!

ஈழத் தமிழர்கள் அடையும் இன்னல்களைக் கேட்ட மாத்திரத்திலே துடிக்கின்ற தமிழ் மக்களுக்கு அவர்கள் அடையும் சித்திரவதைகளை புகைப்படக் கண்காட்சி களாக திராவிடர்கழகம் ஊர்தோறும் காட்டியது. ஈழத் தமிழர்களின் கண்ணீர்க் காட்சிகள் தமிழகம் முழுவதும் நடத்தப்பட்டன. இதனைக் கண்டவர்களின் கண்கள் உதிரத் துளிகளை வடித்தன. ஈழத் தமிழர்களுக்காக எந்த தியாகமும் செய்வோம் என்ற உறுதியினை தமிழர்கள் ஏற்பதற்கு இக் கண்காட்சிகள் பயன்பட்டன.

ஈழத் தமிழர்களுக்காக தமிழகத்தில் ஒலித்த ஆதரவுக் குரல்களில் குறிப்பிடத்தக்கது மாணவர்களின் குரலாகும். ஈழத் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டபோதும், தமிழ் ஈழத் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டபோதும் மாணவர்கள் வெகுண்டெழுந்தனர். கல்லூரிகளிலே சுதந்திர தமிழ் ஈழக் கொடியினைப் பறக்கவிட்டனர். மாணவர்களின் எழுச்சியினைக் கண்ட அரசு, தொடர்ந்து கல்லூரிகளை மூடி வைத்தது. ஆயினும் மாணவர்கள் ஒன்று கூடி பேரணிகளையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்திய வண்ணமிருந்தனர்.

ஈழத்தில் சிங்கள அரசு விதித்த பொருளாதாரத் தடையால் தமிழர்கள் மிகுந்த பாதிப்பு அடைந்தனர். அப்போது தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் ஸ்ரீலங்கா நிவாரண நிதியிலிருந்து 4 கோடி ரூபாய் அளித்தார். இச் செயல் ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்தின் மீது பெரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. முதல்வரின் இவ் வுதவியை தமிழக அரசியல் கட்சிகள் அனைத்தும் வரவேற்றன. ஈழத்தில் களத்தில் நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் ஈழப் புரட்சி அமைப்பு ஆகியவற்றுக்கு தமிழ்நாடு அரசு உதவிகளைச் செய்யும் என்று முதல்வர் எம். ஜி. ஆர். உறுதி அளித்தார்.

தமிழக அரசு விடுதலைப் புலிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பல உதவிகளை செய்தது. அதைப் போல தமிழகத்தில் உள்ள பல அமைப்புகள் நிதி வசூல் செய்து ஈழ விடுதலைக்காக விடுதலைப் புலிகளிடம் வழங்கி மகிழ்ந்தது. தமிழக மக்கள் மனமுவந்து நிதிகளை வாரி வழங்கினர். ஜீப், மோட்டார் சைக்கிள் என்று வாகனங்களையும், நெல் மூட்டை போன்ற தானியங்களையும், ரொக்கமாகவும், மருந்துகளாகவும் வாரி வழங்கி தமிழகத்தின் ஆதரவை வெளிப்படுத்தினர். ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு பெருமைப்படத் தக்க வகையில் அமைந்துள்ளது என்று துணிந்து கூறலாம்.

## இந்திய, இலங்கை அரசுகளுக்கு தமிழகத்தின் நெருக்குதல்கள்

இலங்கையில் தமிழன் கொடுமைப்படுத்தப்படுகின்ற போதெல்லாம் அதனை எதிர்த்து தாய்த் தமிழகத்தில் வாழ்கின்ற தமிழர்கள் தொடர்ந்து குரல் எழுப்பி வந்துள்ளனர். தமிழர்களின் எழுச்சி இந்திய-இலங்கை அரசுகளுக்கு அச்சத்தை விளைவித்துள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை.

இலங்கையில் நடைபெறுகின்ற இனப்படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் பேரணிகளும், கதவடைப்புகளும் நடந்தன. இலங்கை அரசின் அராஜகப் போக்கினைக் கண்டித்து இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன.

விடுதலைப் போராளிகள் தமிழகத்தில் மதிப்புடன் போற்றப்பட்டனர். இது கண்டு இலங்கை அரசு கொதித்தது. விடுதலைப் போராளிகளுக்கு தமிழகத்தில் அடைக்கலம் கொடுக்கவேண்டாம் என்று இந்திய அரசை ஜெயவர்த்தனா கேட்டுக்கொண்டார். அதனை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஏற்றுக் கொண்டு ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களான டாக்டர் பாலசிங்கம், ஈழத் தமிழர் தந்தை செல்வாவின் புதல்வர் சந்திரகாசன், யோகேந்திரன், சத்தியேந்திரன் ஆகிய நால்வரையும் நாடு கடக்க உத்தரவிட்டார். இதனைக் கண்ட தமிழகம் ஆவேசத்துடன் பொங்கி எழுந்தது. மத்திய அரசின் செயலை எதிர்த்து சென்னையில் ஒரு மாபெரும் பேரணி நடத்தப்பட்டது- மீண்டும் விடுதலை வீரர்களைத் திருப்பி அழைக்காவிட்டால் தமிழகத்திற்குள் பிரதம மந்திரியோ, உள்துறை அமைச்சரோ நுழைய முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மத்திய அரசின் போக்கை எதிர்த்து தமிழகம் முழுவதும் கண்டனப் பேரணிகள் நடத்தப்பட்டன. 30-8-85 அன்று தமிழகத்தில் ரயில் நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது. மத்திய அரசு தனது அதிகாரப் பலம் முழுவதையும் பிரயோகித்து ரயில் போராட்டத்தை முறியடிக்க முயற்சித்து தோல்வியைத் தழுவியது. தமிழர்களின் பேரெழுச்சியினால் ரயில் நிறுத்தப் போராட்டம் வெற்றிபெற்றது.

www.tamilarangam.net



தமிழ் ஈழ விடுதலை வீரர்களுக்கு ஆதரவாக இருப்போம். தமிழ் ஈழ ஆதரவாளர்களுக்குப் புகலிடம் அளிப்போம் என்று லட்சோப லட்சம் மக்கள் முழங்கினர். தமிழர்களின் எழுச்சி மத்திய அரசின் முடிவை மாற்றச் செய்தது- எந்த அரசு எந்தப் போராளிகளை நாடு கடத்த உத்தரவிட்டதோ அதே அரசு தனது உத்தரவை தாமே திரும்பப் பெற்றுக்கொண்டது. தமிழர்கள் மத்திய அரசுக்குக் கொடுத்த குரலின் வலிமையும் எழுச்சியுமே இவ் வெற்றிக்குக் காரணமாகும்.

இலங்கைத் தமிழர்களை விசாரணையின்றிச் சுட்டுக் கொல்லலாம், சவப் பரிசோதனையின்றி புதைத்து விடலாம் என்கிற காட்டுமிராண்டிச் சட்டத்தை சிங்கள அரசு பிறப்பித்தது. இக் கருப்பு சட்டத்தை எதிர்த்து தமிழ் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. எழுச்சியினை உணர்ந்த மத்திய அரசு புதுடெல்லியில் உள்ள இலங்கைத் தூதுவரை அழைத்துச் சட்டத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்தது.

அதேபோல இலங்கையில் உள்ள இந்திய தூதர் எஸ். ஜே. எஸ். சத்வால் இலங்கை வெளியுறவு அமைச்சர் சாகுல் அமீதைச் சந்தித்து இந்தியாவின் உணர்வுகளை வெளிப்படுத்தினார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாக இலங்கை அரசு குற்றம் சாட்டியது. இந்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளின் தூண்டுதல்தான் காரணம் என்று இலங்கையிலிருந்து வெளிவரும் 'சிலோன் டெய்லி' என்ற நாளேடு எழுதியது. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நடவடிக்கை மேற்கொள்ள மத்திய அரசுக்கு தமிழகம் கொடுத்த அழுத்தத்தையும் நெருக்குதலையும் இலங்கை நாளேடு வெளிப்படுத்தியது.

ஈழப் போராளிகளின் தொலைத்தொடர்பு கருவிகளை அரசு பறிமுதல் செய்தது. அச் செயலை திராவிடர் கழகம் உட்பட பல அமைப்புகள் கண்டித்தன. விடுதலைப்புலி களின் தளபதி தம்பி பிரபாகரன் பறிமுதல் செய்ததை எதிர்த்து உண்ணாவிரதம் மேற்கொண்டார். நிலைமை விபரீதமாகிவிடும் என அஞ்சி அரசு பறிமுதல் செய்த கருவிகளைத் திரும்ப ஒப்படைத்தது.

யாழ்ப்பாண மருத்துவமனையில் சிகிச்சை பெறுவது தமிழர்களே. தமிழினத்திற்கு தொடர்ந்து தொல்லைகள் விளைவித்துவரும் ஜெயவர்த்தனா தமிழர்களுக்கு சிகிச்சை வசதி கிடைக்காமல் செய்வதற்கு யாழ் மருத்துவமனையை மூடிட திட்டமிட்டார். ஜெயவர்த்தனாவின் மனிதாபிமான மற்ற செயலைக் கண்டித்து தமிழக அரசியல் கட்சிகளும், தமிழர் நல அமைப்புகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டமும் நடத்தின. தமிழர்களின் எதிர்ப்பைக் கண்டு அத் திட்டம் கைவிடப் பட்டது. தமிழர்களின் எழுச்சியினால் யாழ் மருத்துவ மனை மூடப்படாமல் தடுக்கப்பட்டது.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதர் திசா ஜெயக் கொடி என்பவரின் நடவடிக்கைகள் இந்தியப் பாதுகாப் புக்கு ஆபத்தானவை. அவரை வெளியேற்றவேண்டும் என்ற குரல் தமிழகத்தில் ஓங்கி ஒலித்தது. குறிப்பாக திராவிடர் கழகமும், தமிழ்நாடு காமராஜ் காங்கிரசும் இந்தக் கோரிக்கையை முன் வைத்தது.

தமிழர்களின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு சிங்கள உளவாளியும் ஜெயவர்த்தனேயின் ஏவு கணையுமான திரு. ஜெயக்கொடியைக் கட்டாயமாக வெளி யேற்றியது.

இந்தியப் படை இலங்கையில் நுழைந்து விடுதலைப் புலிகளை வேட்டையாடியது. தமிழர் பகுதிகளை இந்தியா கைப்பற்றியது. விடுதலைப் புலிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். தளபதி தம்பி பிரபாகரனின் உயிருக்குக் குறிவைத்து தேடுதல் பணியை இந்திய ராணுவம் தீவிரமாக செய்தது. அப்போது தமிழகத்திலிருந்து கடுமையான எதிர்ப்புக் குரல் கிளம்பியது. 'பிரபாகரனைக் கொல்லாதே' 'பிரபாகரனைக் காப்பாற்று!' 'பிரபாகரனைக் காப்போம்' எனும் முழக்கங்கள் பட்டி தொட்டி யெல்லாம் எதிரொலித்தது. பிரபாகரன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் தமிழகத்தில் என்ன நிலை ஏற்படும் என்று கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவிற்கு உணர்ச்சி வெள்ளம் பீறிட்டது!

தலைவர்கள் அனைவரும் அடுக்கடுக்காக அறிக்கைகள் விடுத்தனர். மக்களின் எழுச்சியைக் கண்ட இந்திய அரசு தமது போர் வேகத்தை -பிரபாகரனின் தலையைக் குறி வைக்கும் போக்கை குறைத்துக் கொண்டது.

இந்தியப்படை இலங்கையில் தமிழர்களை வேட்டையாடியதை தமிழர்கள் எதிர்த்தனர். இந்திய அரசே! ராணுவத்தை வாபஸ் வாங்கு! என்று குரல் எழுப்பினர். தமிழர்களுக்கு எதிரான ஒப்பந்தத்தையும் எதிர்த்து எரித்துச் சாம்பலாக்கினர். தமிழர்கள் பலமுறை வேண்டு கோள் விடுத்தும் இந்திய அரசு படையைத் திருப்பி அழைக்கவில்லை. இச் செயல் தமிழர்களுக்கு ஆத்திரம் ஊட்டியது. இந்தியாவை ஆளுகின்ற கட்சி தமிழகத் தேர்தலில் போட்டியிட்டபோது தமிழக மக்கள் சரியான தீர்ப்பு அளித்தார்கள். ஒப்பந்தத்தை எதிர்த்த ஈழப் போராட்டத்தை தனி ஈழத்தை ஆதரித்த தி.மு.க. வுக்கு ஆட்சிப் பொறுப்பை வழங்கினர். துரோக ஒப்பந்தம், விடுதலைப் புலிகளைக் கொன்று குவித்த கட்சிக்கு 55 தொகுதிகளில் 'டெபாசிட்' இழக்கச் செய்தனர் ! ஒப்பந்தத்திற்கு முன் அக் கட்சி பெற்றிருந்த சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிக்குமேல் குறைத்து தண்டனை வழங்கினர். தமிழகத் தேர்தலில் காங்கிரசின் தோல்விக்கு ஈழப் பிரச்சினையும் ஒரு முக்கிய காரணமாகும் 'கெட்ட பின்பு ஞானம்' என்பதற்கொப்ப டில்லி அரசும் காங்கிரஸ் கட்சியும் ஓரளவுக்கு இதை உணர்ந்துள்ளது என்பது குறிப்பிடத் தகுந்தது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் கலைஞரின் பங்கு தனியிடத்தை-சிறப்பிடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. 'இருபத்தைந்து ஆண்டு காலமாக இலங்கைத் தமிழர் பிரச்சினை என் நாடித் துடிப்பாக இருந்து வருகிறது' என்ற கலைஞர் கூற்றின் உண்மையினை அவரது செயல்கள் நிரூபிக்கின்றன. இலங்கை அரசு கலைஞரைக் கடுமையாக விமர்சனம் செய்வதும், சிங்கள அரசும், சிங்களர்களும் கலைஞரின் தேர்தல் தோல்வியைப் பட்டாசு வெடித்து, இனிப்பு பரிமாறிக் கொண்டாடியதும் ஈழப் போராட்டத்தில் கலைஞரின் பங்கை உணர்த்துகின்றன. ஈழத் தமிழர் களுக்கு ஆதரவாக தமிழகத்தில் எழுச்சியை உண்டாக்கிய பெருமை கலைஞரைச் சாரும். ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும், மறியல்களையும் இடைவிடாது நடத்தி தமிழகத்தின் உணர்ச்சியை மத்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் உணர்த்தினார். இந்திய அரசு, இலங்கையில் அழிந்து கொண்டிருக்கும் தமிழர்களைக் காப்பாற்ற தக்க நடவடிக்கை எதையும் எடுக்காமையைக் கண்டித்து தமிழர்களின் கொந்தளிப்பை வெளிப்படுத்தும் வகையில் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். பேராசிரியர் அன்பழகன் அவர்களும் கலைஞருடன் சட்ட மன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார். இலங்கைப் பிரச்சினையை அய்க்கிய நாடுகள் சபைக்கு கொண்டு செல்ல இந்தியா மறுத்தபோது, இலங்கையில் தமிழர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீது படுகொலை நடத்தியவர்களை விசாரித்துத் தண்டித்திட வேண்டும் என்று இரண்டு கோடி கையொப்பங்களை தமிழர்களிடம் பெற்று அய். நா. சபைக்கு அனுப்பி வைத்தார். மத்திய அரசு அலுவலக முன்பும், இலங்கைத் தூதரகம் முன்பும் மறியல்கள் செய்து சிறை புகுந்தார். தமது பிறந்த நாளை (62) 'ஈழ விடுதலை எழுச்சி நாளாக அனுசரிக்க வேண்டினார். ரயில் மறியல், விமான மறியல் நடத்தினார். துரோக ஒப்பந்தத்தை எதிர்த்தார். எதிர்க் கட்சியாக இருந்து பணியாற்றிய கலைஞர், முதல்வர் பொறுப்பேற்ற பிறகும், 'தனி ஈழம் கிடைத்தால் தி. மு. க. வுக்கு மகிழ்ச்சி என்று தமது நிலையை மீண்டும் தெளிவு படுத்தினார்.

**(ஈழ விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு என்ன? கி. வீரமணி எம்.ஏ., பி.எல்., பொதுச்செயலாளர், திராவிடர் கழகம், நாள்: 29-4-1989)**

---

திராவிடன் அச்சகம், பெரியார் திடல், சென்னை-600 007

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்